DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண். 43/2022**

**அ.சா.– 6**

| | |
|---|---|
| பெயர் : திரு. கோபி | கிராமம்: அத்தனூர்பட்டி |
| த/பெ. : திரு. பெருமாள் | தாலூக்கா : வாழப்பாடி |
| வயது : 32 | தொழில்: டைல்ஸ் மேஸ்திரி வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 44 of 1969, this the 27th day of January, 2025.

( எதிரி ஆஜர் )

**முதல்விசாரணை**:–

நான் வாழப்பாடி தாலூக்கா, அத்தனூர்பட்டி, புது வீதியில் குடியிருக்கிறேன். நான் டைல்ஸ் ஒட்டும் மேஸ்திரி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன மணிகண்டன் எனது அண்ணன் முறை ஆவார். மணிகண்டன் என்பவர் எதிரியின் கணவர் ஆவார். நான் சம்பவம் பற்றி கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தனர். போலீசார் என்ன எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் கையெழுத்துக்கள் என்னுடையதுதான். பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து மட்டும் – **அ.சா.ஆ.–4** ஆகும். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து மட்டும் – **அ.சா.ஆ.–5** ஆகும்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கேட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**குறுக்குவிசாரணை(அரசு தரப்பில்)**:–

போலீஸ் விசாரணையில் 01.08.2021ம் தேதி சம்பவ இடத்திற்கு வந்ததாகவும், மணிகண்டன் என்பவருக்கு அதிகமாக குடிப்பழக்கம் இருந்ததால்

ஆஜர் எதிரி அவரை அடித்துக்கொன்றுவிட்டதாகவும், இறந்துபோன மணிகண்டனின் அக்கா சித்ரா சொன்னதாகவும், அதை நான் போலீஸ் விசாரணையில் சொன்னதாகவும், போலீசார் இரவு சுமார் 8.30 மணியளவில் என்னையும் பூபதி என்பவரையும் சாட்சியாக வைத்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அதில் எங்கள் ஊரைச் சேர்ந்த பூபதி மற்றும் நானும் கையொப்பம் செய்ததாகவும், பின்னர் 9.30 மணியளவில் சம்பவ இடத்திலிருந்த இரத்தக்கறை படிந்த சிமெண்ட் தரைதளம் சிறிதளவும், இரத்தக்கறை படிந்த நிலையில் கிடந்த வெள்ளை வேஷ்டி, தலையணை உறை ஆகியவற்றை எங்கள் முன்னிலையில் கைப்பறியதாகவும், நாங்கள் அந்த கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் சொல்லிவிட்டு தற்பொழுது எதிரிக்கு ஆதரவாக அவரிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேலும் நான் இரவு அங்கு சென்றபோது ஆஜர் எதிரியும், அவரது பெற்றோரும் அங்கு இருந்ததாக அவரை காப்பாற்றுவதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்குவிசாரணை(எதிரி தரப்பில்)</u>:-** இல்லை.

Sd./- N. Ramakrishnan
I Additional District Judge,
Salem.